**தலைப்பு 186 – தொழில்நுட்ப அமைச்சு**

-------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 186- தொழில்நுட்ப அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 இல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 ஒக்டோபர் 09 இல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழில்நுட்ப அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) ஆதனம் பொறி மற்றும் உபகரணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற இலங்கை நானோ தொழில்நுட்ப (தனியார்) கம்பனியின் (SLINTEC) கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக கடந்த வருடங்களில் செலவிடப்பட்ட ரூபா 700,000,000 அமைச்சின் சொத்தக்களாக நிதி நிலைமைக் கூற்றில் மொத்தம் ரூபா 713,569,740 ஆன சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. | ரூபா 700,000,000 செலவினமானது தொழில்நுட்ப அமைச்சின் கணனி மயமாக்கப்பட்ட கணக்கியல் முறையிலிருந்து நீக்கப்பட்டு கல்வி அமைச்சின் கணனி மயமாக்கப்பட்ட கணக்கியல் முறையின் ஊடாக கையகப்படுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு இணக்கம் தெரிவித்து அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் கல்வி அமைச்சின் புதிய New Cigas Web Interface இல் சொத்துக்களைக் கணக்கிடுவதற்குத் தேவையான உள்ளீடுகள் எதுவும் இல்லை என்றும், அரச கணக்குத் திணைக்களத்தால் தொடர்புடைய உள்ளீடு அமைக்கப்பட்டவுடன், | அமைச்சிற்கு சொந்தமான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெறுமதி கணக்கிடப்பட்டு எங்களுக்குத் தெரிவிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ii) | மீளாய்வாண்டில் ரூபா 5,190,000 இற்கு வாங்கப்பட்ட இருபது (20) மடிக்கணினிகளின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் சேர்க்கப்படவில்லை. | அப்பெறுமதி 2023 மார்ச் மாதத்தில் அமைச்சின் சொத்தாக CIGAS திட்டத்தில் சேர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | வாங்கிய சொத்துக்கள் தொடர்புடைய காலத்தில் சொத்துக்களாகக் கணக்கிடப்பட வேண்டும். |

**(ஆ) முற்பணக் கணக்கு மீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வன் கோல்.·.பேஸ் கோபுரத்தின் பதினொன்றாவது மாடியில் அமைச்சை நடாத்திச் செல்வதற்கு ஏற்படுத்தப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தின்படி, ஆரம்ப வைப்புத் தொகையாக ரூபா 4,206,720 செலுத்தப்பட்டது. 2016 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய அரச கணக்குச் சுற்றறிக்கை இலக்கம் 250/2016(i) இன் படி, அரச அலுவலகக் கட்டிடங்களின் வாடகைக்கான முற்பணக் கொடுப்பனவு குடியரசுக் கணக்கில் வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக, ஒவ்வொரு முற்பணத்திற்கும், 9188 - வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கு மற்றும் 9189 - வாடகை மற்றும் வேலை முற்பண திரண்ட கணக்கு போன்ற பிரதான பேரேட்டு கணக்குகளின் கீழ் பதிவு செய்யப்படவில்லை. | நீங்கள் சுட்டிக்காட்டியுள்ளபடி, இந்த வைப்புத் தொகையை திரும்பப் பெறும் தேதியில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றும் முறையாக கணக்கு வைப்பதற்கு முடியுமான வகையில் வாடகை மற்றும் வேலை முற்பண திரண்ட கணக்கின் கீழ் கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் அரச கணக்குச் சுற்றறிக்கை 250/2016 (I) இன் படி மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | வாடகைக்காக செலுத்தப்பட்ட முற்பணம் வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கில் முறையாக பதிவு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலவின முகாமைத்துவ குறைபாடு காரணமாக ஐந்து செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தம் ரூபா 2,150,000 ஆன ஒதுக்கீடுகள் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்ததுடன், மேலும் இரண்டு செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தம் ரூபா 1,400,000 ஆன ஒதுக்கீடுகளில் ரூபா 950,000 ஏனைய செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்டதன் பின்னர் ரூபா 450,000 தொகையான ஒதுக்கீடு சேமிக்கப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப அமைச்சு மாண்புமிகு ஜனாதிபதியின் கீழ் இயங்குவதால், 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் வரை அமைச்சர் அலுவலகம் அல்லது இராஜாங்க அமைச்சு பதவியணியொன்று இருக்கவில்லை. 2022.09.08 அன்று தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் நியமிக்கப்பட்டு, அதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது ஆண்டின் பிற்பாதியில் நடைபெற்றதிலிருந்தே, ஒதுக்கீடுகள் மிகையாகவே உள்ளன. பொதுவாக இதற்கான காரணங்கள் மேலே கூறப்பட்டவை மற்றும் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம். 03/2022 இன் கீழ், அத்தியாவசிய செலவுகளை மட்டும் செய்வதன் கூலம் செலவுகளைக் கட்டுப்படுத்துதல், இந்த வருடத்தில் அமைச்சுக்கு வாகனமொன்று ஒதுக்கப்படாததாலும், அமைச்சு வன் கோல்.ஃபேஸ் கட்டிடத்தில் பராமரிக்கப்படுவதாலும் பராமரிப்புத் தேவைகள் ஏற்படாமை போன்ற விடயங்களால் ஒவ்வொரு செலவுத் தலைப்பின் கீழும் சேமிப்புகள் ஏற்பட்டுள்ளன. | மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட்டு தேவையான தொகைக்கு மாத்திரமே நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டு முறையான செலவு முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 183,248 பெறுமதியான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் அடையாளம் காணப்பட்டு 2022 இன் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்படாத போதிலும் 2023 இன் முதல் காலாண்டில் இந்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் எழும் பொறுப்புகளுக்கான பதிவேட்டை பராமரித்து முறையாக இறுதி நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் முறையாக நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்திட்டங்கள் முடிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையின் ரூபா 40 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட செயற்திட்டத்தில். 2022 திசெம்பர் 31 வரை மொத்தச் செலவாக ரூபா 26.52 மில்லியன் செலவிடப்பட்டு இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்திறகான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வு (ICT Solution for Gov Analyst Dept-GAD ) செயற்திட்டத்திற்கான நடவடிக்கைகளில் இருந்து சுமார் 75 சதவீதம் முடிக்கப்பட்ட பின்னர் இவ்வாறு உருவாக்கப்பட்ட அமைப்பின் விடயங்கள் மற்றும் அமைப்பின் தேவைகளுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்டமையால் அச்செயற்திட்டம் பாதியில் நிறுத்தப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டில் இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்திறகாக ஆரம்பிக்கப்பட்ட ICT Solution for Gov Analyst Dept (GAD) செயற்திட்டத்திற்காக அரச இரசாயனப் பகுப்பாய்வாளரின் அங்கீகாரம் பெறப்பட்டது. அத்திணைக்களத்தின் தேவைகள் மற்றும் உருவாக்கப்பட்ட மென்பொருள் அமைப்பினால் வழங்கப்படும் வசதிகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் கண்டறியப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்ட வேறுபாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மென்பொருள் மேம்பாட்டுப் பணிகளை மேற்பார்வையிடுவதற்கு 2023 மார்ச் 27 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இதுவரை உருவாக்கப்பட்ட மென்பொருள் அமைப்பை நிறுவி செயல்படுததுவதற்கு முடிவு செய்யப்பட்டது. | சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு அச்செயற்திட்டம் முறையாக செயற்படுத்தப்பட வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தொழில்நுட்ப அமைச்சை நடாத்துவதற்கு 7,512 சதுர அடி நிலமொன்று மாதாந்தம் ரூபா 1,878,000 கொடுப்பனவின் அடிப்படையில் 2021 யூன் முதல் 05 ஆண்டுகளுக்கு குத்தகை ஒப்பந்தமொன்று, ஒரு தனியார் கம்பனியுடன் செய்து கொள்ளப்பட்டது. அதில் 2,217 சதுர அடிகள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதால் 2022 யூலை மாதத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்குத் திருப்பி கையளிக்கப்பட்டது.அந்தக் காலக்கட்டத்தில் செலுத்தப்பட்ட ரூபா 6,651,000 ஆன தொகை விளைவற்ற செலவொன்றாக அவதானிக்கப்பட்டது. | அமைச்சுக்கான குறைந்தபட்ச பதவியணியொன்று நிறுவப்பட்டதன் பின்னர், இடவசதி இல்லாமல் ICTA நிறுவனத்தின் ஒரு அறையில் உரிய வசதிகள் இன்றி அமைச்சு தனது கடமைகளை தொடர்ந்தது. 2021 யூன் 30 இல் ICTA நிறுவனம் வேறொரு கட்டிடத்திற்கு மாற்றப்பட வேண்டியிருந்நதால் அந்தத் தேதிக்கு முன்னதாக அமைசசினை வன் கோல்.:.பேஸ் இற்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு நேரிட்டது.<br><br>2022 யூலை மாதத்தில் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சின் பணிகள் எதிர்காலத்தில் செயற்படாத நிலையிலும், அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு மற்றும் ஸ்தாபனத்தின் ஆரம்பப் பணிகளைச் செய்து கொண்டிருந்த வரையறுக்கப்பட்ட டெக்னோ பார்க் டெவலப்மென்ட் கம்பெனி லிமிடெட்டின் பணிகளும், திட்டமிடப்பட்டதன் பிரகாரம் முன்னெடுத்துச் செல்வது தொடர்பான சிக்கல்கள் எழுந்திருந்தன. வன் கோல்.:.பேஸ் கட்டிடத்தில் உள்ள அலுவலக இடத்தை வாடகைக்கு எடுப்பது தொடர்பான தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் கணக்காய்வு விசாரணை சமர்ப்பித்ததன் காரணமாக, முடிந்தளவு குறைந்தபட்ச இடமொன்றில் நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. தற்போதைய நிதி நிலைமை காரணமாக, அலுவலக இடத்தை அதிகபட்சமாக நிர்வகிக்க வேண்டியதன் அவசியத்தையும் | அமைச்சுக்கான கட்டிடங்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு குறைந்த செலவில் தெரிவு செய்யப்பட்டு வளங்கள் அதிகபட்ச செயற்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதற்கான செலவையும் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்துக் கொள்கிறேன். | |
| (ஆ) | 09 நோக்கங்களை நிறைவேற்றும் நோக்கத்தில் ரோபோ தொழிநுட்பத்திற்கான விசேட நிலையம் (Centre of Excellence in Robotic Applications) நிறுவுவதற்காக முன்னாள் கைத்த்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சினால் ரூபா 189,909,295 செலவிடப்பட்டு நிர்மாணப் பணிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இந்த 09 நோக்கங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலையம் 2014 முதல் பல அமைசசுக்களின் கீழ் நடாத்தப்பட்டு வருகிறது.அதன்படி, நீங்கள் சுட்டிக்காட்டியபடி, அதன் நோக்கம் நிறைவேறாததற்கான காரணங்களைக் கண்டறிவதற்கு விரிவான விசாரணையொன்று நடாத்தப்பட வேணடியுள்ளதால் அது தொடர்பான அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | தற்போதுள்ள வளங்கள் அந்தந்த திட்டங்களின் நோக்கங்களை அடைவதற்கு திறமையாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | ரோபோ தொழிநுட்ப நிலையத்திற்காக இரண்டு 3000 சதுர அடி அளவான அரங்குகள் 10 வாயுச் சீராக்கி இயந்திரங்கள் நிறுவப்பட்டு தரை விரிப்புகள் அமைக்கப்பட்டு தளத்திற்கான திட்டம் (floor plan) தயாரிக்கப்பட்டிருந்தது. இதற்காக 2018ஆம் ஆண்டு 40 மில்லியன் செலவில் நிறுவப்பட்ட Robert Arm இயந்திர செயற்திட்டம் செயல்படுத்தப்படாமையால் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | ROBOT ARM இயந்திர உபகரணத்தை எதிர் காலத்தில் முறையாக பயன்படுத்தக்கூடிய நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | தற்போதுள்ள வளங்கள் அந்தந்த திட்டங்களின் நோக்கங்களை அடைவதற்கு திறமையாக பயன்படுத்தப்பட வேண்டும |

**3.3 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதி செயலாற்றல் கூற்றில் வருமானத்தின் கீழ் உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வரியாக ரூபா 16,755,636,726 காட்டப்பட்டிருந்தமை | எதிர்காலத்தில், இந்த வருமானத்திற்கான மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அறிக்கைகள் அமைச்சிடம் பெறப்பட்டு, தேவையான ஒழுங்குமுறை நடவடிக்கைகளை | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள வருமான விவரங்களை சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் இருந்து பெற்று, |

| | | |
|---|---|---|
| தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் சேகரிக்கப்பட்டு திறைசேரிக்கு அனுப்பப்பட்ட திறைசேரியால் சிகாஸ் (CIGAS) திட்டத்தில் உள்ளிடப்பட்ட பெறுமதியாக இருந்ததுடன் அந்த வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக திறைசேரியால் சிகாஸ் (CIGAS) திட்டத்தில் உள்ளிடப்பட்ட பெறுமதியுடன் கூடிய ஆவணத்தைத் தவிர, தேவையான தகவல்கள் அமைச்சில் காணப்படவில்லை என்பதுடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து விவரங்களைப் பெறுவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் அமைச்சிற்கும் அந் நிறுவனத்திற்கும் இடையே முறையான அமைப்பொன்றும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன். உங்களால் குறிப்பிட்டுள்ளபடி, ருபா 16,755,636,726 இற்கு தேவையான விரிவான அறிக்கையொன்றை கொண்டுவந்து தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | அந்த நடவடிக்கைகளை முறையாக ஒழுங்குபடுதுதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |